**Source:** Tamil Murasu, Page 3
**Date:** 8 April 2021

NUHS
National University
Health System

# ‘புற்றுநோய்க்கு எதிரான மருந்தால் கொவிட்-19ஐ குணப்படுத்த முடியும்’

கொவிட்-19 கிருமித்தொற்றைக் குணப்படுத்தும் ஆற்றல், புற்றுநோய்க்கு எதிராக உருவாக்கப்பட்ட மருந்துக்கு உண்டு என்று சிங்கப்பூரும் அமெரிக்காவும் இணைந்து மேற்கொண்ட ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. மிதமான கொவிட்-19 அறிகுறிகள் முதல் கடுமையான அறிகுறிகள் வரை உள்ள நோயாளிகளுக்குப் புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் மருந்துப்பொருள் ஒன்று பயன் அளிப்பதாக இருநாட்டு ஆய்வாளர்களும் கண்டுபிடித்துள்ளனர்.

‘கீமோதெரப்பி’ சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும் ‘டோபோடீகன்’, கொவிட்-19 கிருமித்தொற்றுக்குக் காரணமான ‘சார்ஸ்-கொவ்-2’ கிருமியால் ஏற்படும் கடுமையான பாதிப்பையும் தொற்றால் ஏற்படும் இறப்பு விகிதத்தையும் குறைப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு மிதமான அல்லது கடுமையான கொவிட்-19 பாதிப்புக்குள்ளாகும் நோயாளிகள், வீக்கத்தால் பாதிக்கப்படுவர். அவர்களது உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி, வழக்கத்திற்கு மாறாகச் செயல்படுவதால் இந்த வீக்கம் ஏற்பட்டுவிடுகிறது.

எனவே, நோய்க்கு எதிரான




கொவிட்-19 தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் சூழலில் ஆய்வு பலனளித்துள்ளது என்றார் ஆய்வை மேற்கொண்ட டாக்டர் ஆனந்த் ஜெயசேகரன். **படம்: என்சிஐஎஸ்**

செயல்பாட்டை ‘டோபோடீகன்’ கட்டுப்படுத்தி, உடலில் வீக்கம் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக புற்றுநோய்க் கழகத்தின் (என்சிஐஎஸ்) ஆய்வாளர்கள் அமெரிக்க மருத்துவப் பள்ளியுடன் இணைந்து, தாங்கள் கண்டறிந்த ஆய்வு முடிவுகளை மார்ச் 30ஆம் தேதியன்று ‘செல்’ எனும் மருத்துவ இதழில் வெளியிட்டனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd.
Permission required for reproduction